**ஏப்ரல் – 05**

# TNPSC துளிகள்

- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று சுபாஷ்குமார் என்பவர், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக கூடுதல் பொறுப்பேற்றுள்ளார்.
    - ஏற்கனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பதவி வகித்த சசி சங்கர் 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று ஓய்வு பெற்றதையடுத்து அவர் இப்பதவியின் பொறுப்பை ஏற்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## பூர்வகுடி மற்றும் பழங்குடியினரின் வன நிர்வாக அறிக்கை

- சமீபத்தில் பூர்வகுடி மற்றும் பழங்குடியினரின் வன நிர்வாகம் என்ற தலைப்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கை, ஐ.நாவின் உணவு மற்றும் வேளாண் பாதுகாப்பு அமைப்பு மற்றும் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளிலுள்ள பூர்வகுடி மக்களின் மேம்பாட்டிற்கான நிதியம் ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- கரீபியன் மற்றும் லத்தீன் அமெரிக்காவின் பூர்வகுடி மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் காடுகள் அழிப்பு வீதம் வெகு குறைவாக உள்ளது.
- அப்பகுதியிலுள்ள பிற காடுகளை அதிகாரிகள் பாதுகாப்பதை ஒப்பிடுகையில் பூர்வகுடி மற்றும் பழங்குடியின மக்கள் தங்கள் பகுதியைச் சேர்ந்த காடுகளைப் பாதுகாப்பதில் சிறந்தவர்களாக உள்ளனர் என்பதை இந்த அறிக்கை குறிப்பிட்டு காட்டுகிறது.
- அமேசான் நீர்பிடிப்புப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்படாத காடுகளில் ஏறத்தாழ 45% காடுகள் பூர்வகுடி மக்களின் வாழ்விடப் பகுதிகளில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.
- பூர்வகுடி மக்கள் வாழும் பகுதிகளில் பாதிக்கப்படாத காடுகளின் பரப்பளவு, 2000 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் 4.9% மட்டுமே குறைந்துள்ளது.
- இருப்பினும் பூர்வகுடி மக்கள் வாழாத பகுதிகளில் 11.2% வரை குறைந்துள்ளது.




## இராணுவப் பண்ணை

- இந்திய இராணுவமானது, 132 வருட சேவைக்குப் பிறகு இராணுவப் பண்ணையினை மார்ச் 31 அன்று மூடியுள்ளது.

- பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்த காவற்படை வீரர்களுக்குச் சுகாதாரமான பசும்பால் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட பண்ணைகளே இராணுவப் பண்ணைகளாகும்.

*முக்கிய தகவல்கள்*

- பண்ணைகளில் இருந்த தொழிலாளர்கள் அந்த அமைப்பிற்குத் தொடர்ந்து சேவையை வழங்க வேண்டும் என்பதற்காக அந்த அமைச்சகத்திற்குள்ளேயே அவர்கள் மீண்டும் பணியமர்த்தப் படுவார்கள்.
- 2012 ஆம் ஆண்டில் Quarter Master General என்ற பிரிவானது இந்தப் பண்ணைகளை மூடுவதற்குப் பரிந்துரை செய்தது.
- இதன் பிறகு 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் துணைநிலைப் படைத்தலைவர் DB சேகாட்கர் (ஓய்வு) தலைமையிலான குழுவும் இப்பண்ணைகளை மூடுவதற்கு பரிந்துரை செய்தது.
- முதல் இராணுவப் பண்ணையானது அலகாபாத்தில் 1889 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 அன்று அமைக்கப்பட்டது.
- சுதந்திரத்திற்கு பிறகு 30,000 மாடுகளுடன் இந்தியா முழுவதும் 130 பண்ணைகள் உருவாக்கப் பட்டன.
- 1990 ஆம் ஆண்டுகளில் லே மற்றும் கார்கில் ஆகிய பகுதிகளிலும் கூட இந்தப் பண்ணைகள் அமைக்கப் பட்டன.
- இராணுவக் குடியிருப்புகள் நகர்ப்புறப் பகுதியிலிருந்து சற்று தொலைவில் அமைந்திருந்ததால் இந்தப் பண்ணைகள் அவசியமானதாக இருந்தது.
- தற்போது நகரங்களின் விரிவாக்கத்தால் இராணுவக் குடியிருப்புகளும் நகரங்களுக்கு அருகில் வந்து அமைந்துள்ளன.
- இதனால் திறந்தவெளிச் சந்தைகளிலிருந்தே அதிகளவில் பால் கொள்முதல் செய்யப் பட்டு வருகிறது.
- பல வருடங்களாக பண்ணையின் நிர்வாகத்தில் நிலவும் பல ஊழல் குற்றச்சாட்டுகளும் இந்தப் பண்ணைகள் மூடப்பட்டதற்கான முக்கிய காரணங்களுள் ஒன்றாகும்.
- இந்தப் பண்ணைகள் 1971 ஆம் ஆண்டு போரின் போது மேற்கத்திய மற்றும் கிழக்கத்தியப் படைகளுக்கும், கார்கில் போரின் போது வடக்கிலிருந்தப் படை வீரர்களுக்கும், பால் வழங்கி ஒரு மகத்தான சேவையை நல்கின.

## வெளிநாடு வாழ் இந்தியர்கள் குடியுரிமை (OCI) நெறிமுறைகள்

- வெளிநாடுவாழ் இந்தியர்கள் குடியுரிமைக்கான (Overseas Citizens of India – OCI) உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பட்டியல் ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.
- இதற்கு முன்பு இந்த உரிமைகள் 2005, 2007 மற்றும் 2009 ஆகிய வருடங்களில் அறிவிக்கப் பட்டுள்ளன.
- இந்தியாவிற்குப் பயணம் செய்ய OCI அட்டையைக் கொண்டுள்ள இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் தங்களது புதிய கடவுச்சீட்டு மற்றும் OCI அட்டைகளுடன், பழைய கடவுச்சீட்டினையும் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.
- தற்போதுள்ள OCI நெறிமுறைகளின்படி (2005 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது) 20 வயது வரையில் (அ) 50 வயதினை எட்டிய பிறகு OCI அட்டையைக் கொண்டுள்ளவர்களுக்குப் புதிய கடவுச்சீட்டு பெறும் போது ஒவ்வொரு முறையும்

புதிய OCI அட்டை வழங்கப் படும்.

- இப்போது, OCI அட்டைகளை மீண்டும் பெறுவதற்கு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை கால அவகாசத்தை நீட்டிப்பதற்கு இந்திய அரசு முடிவெடுத்துள்ளது.

### ஆனந்தம்

- மத்திய கல்வித் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் "நிசாங்" ஜம்முவிலுள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் "ஆனந்தம் : மகிழ்ச்சிக்கான மையம்" என்ற ஒரு மையத்தினைத் திறந்து வைத்தார்.
- இந்த மையம் 2021 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் கல்வி முறையை மாற்றுவதை நோக்கமாக கொண்ட தேசிய கல்விக் கொள்கை 2020 உடன் ஒன்றிணைகிறது.
- "ஆனந்தம் : மகிழ்ச்சிக்கான மையம்" எனும் கருத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள முதன்மை நடவடிக்கைகள் ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை
    - ஆலோசனை வழங்குதல்,
    - முழுமையான ஆரோக்கியம்,
    - மகிழ்ச்சியின் மேம்பாட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புகள்,
    - ஆராய்ச்சி மற்றும் தலைமை,
    - ஆசிரியர்கள் மேம்பாடு

## சர்வதேசச் செய்திகள்

### 'SHANTIR OGROSHENA' 2021

- 'SHANTIR OGROSHENA' 2021 (அமைதியின் முன்னோடி) எனப் பெயரிடப்பட்ட ஒரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 04, முதல் ஏப்ரல் 12 வரை வங்காள தேசத்தில் நடைபெற உள்ளது.
- இப்பயிற்சியின் கருத்துரு, "வலுவான அமைதி காப்பு நடவடிக்கைகள்" (Robust Peace Keeping Operation) என்பதாகும்.
- இப்பயிற்சியானது
    - வங்காள தேசத்தின் 'தேசத் தந்தை' எனப் போற்றப்படும் பங்கபந்து ஷேக் முஜிபூர் ரஹ்மான் அவர்களின் பிறந்த நாள் நிறைவு மற்றும்
    - நாட்டின் 50வது சுதந்திர தினம்

  ஆகியவற்றை நினைவு கூர்வதற்காக நடத்தப்படுகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### CIISCO வழிமுறைகள்

- சூரியனின் உள் ஒளிவட்டப் பகுதியிலிருந்து ஒளிவட்டப் பொருள் வெளியேற்றத்தினை (Coronal Mass Ejection – CMEs) அடையாளம் காணுவதற்கான (CIISCO) வழிமுறைகள் (Algorithms) இந்தியாவால் சூரியனுக்கு அனுப்பப்படும் முதல் விண்கலமான 'ஆதித்யா L1' என்ற விண்கலத்தில் (CIISCO – Coronal Mass Ejections Identification in Inner Solar Corona) பயன்படுத்தப் படும்.

- CIISCO ஆனது ஆரியபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி மையம் (ARIES) மற்றும் பெல்ஜியத்தின் ராயல் ஆய்வகம் ஆகியவற்றால் உருவாக்கப் பட்டது.
- இந்தப் புதிய வழிமுறைகள் சூரியனின் கீழ்மட்ட ஒளிவட்ட (கொரோனா) பகுதியில் அதிவேகமாக நடைபெறும் ஒளிவட்டப் பொருள் வெளியேற்றத்தைக் கண்டறியவும் அதனைக் கண்காணிக்கவும் பயன்படுத்தப்படும்.

***ஒளிவட்ட (கொரோனா) பொருள் வெளியேற்றம் (CME)***

- இது சூரியனிலிருந்து வெளிவரும் காந்தப்புலக் கோடுகளால் திரிக்கப்பட்ட பெரிய வாயுக் குமிழ்கள் ஆகும்.
- இவை விண்வெளியில் பல்வேறு இடையூறுகளையும் புவிகாந்தப் புயல்கள், செயற்கைக் கோள் செயலிழப்பு மற்றும் மின்தடை போன்றவற்றையும் ஏற்படுத்தச் செய்கின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கியூலெக்ஸ் கொசு

- பருவ நிலைகளில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் வெப்பநிலை உயர்வு போன்றவற்றால் கியூலெக்ஸ் (அ) பொதுவான வீட்டுக் கொசு டெல்லி முழுவதும் மீண்டும் தென்பட தொடங்கியுள்ளன.
- தூய்மையான நீரில் இனப்பெருக்கம் செய்கின்ற, டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்களைப் பரப்பும் ஏடிஸ் எஜிப்தி கொசுக்கள் (Aedes aegypti) போன்று அல்லாது கியூலெக்ஸ் கொசுக்கள் தூய்மையற்ற தேங்கிய நீரில் இனப்பெருக்கம் செய்கின்றன.
- கியூலெக்ஸ் கொசுக்கள், ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய், வெஸ்ட் நைல் வைரஸ் மற்றும் யானைக்கால் நோய் போன்ற நோய்களைப் பரப்பும் நோய் பரப்பிகளாகும்.
- இவை மனித உடலின் வெப்பம் மற்றும் மனிதன் வெளியிடும் கார்பன் டை ஆக்சைடு ஆகியவற்றைக் கண்டறிந்து மனிதர்களைக் கடிக்கின்றன.

# முக்கிய தினங்கள்


## உலக மதி இறுக்கத்திற்கான விழிப்புணர்வு தினம் – ஏப்ரல் 02

- இத்தினம், மதி இறுக்கத்துடன் உள்ளவர்களை மக்கள் புரிந்து கொள்ளச் செய்யவும் அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் அவர்களுக்கு உலகளாவிய ஆதரவினை அதிகரிக்கச் செய்யவும் வேண்டி மக்களை ஊக்குவிப்பதற்கு என்று கடைபிடிக்கப் படுகிறது.
- மதி இறுக்கம் என்பது சமூகம் மற்றும் மொழித் தொடர்புகளில் குறைபாடு, செய்ததையேத் திரும்பத் திரும்பச் செய்தல் மற்றும் குறைவான ஆர்வம் என்ற குறைபாடுகள் கொண்ட ஒரு நரம்பியல் வளர்ச்சிக் கோளாறு நோயாகும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, “பணியிடங்களில் சேர்த்துக் கொள்ளுதல் : பெருந்தொற்றுக்குப் பிந்தைய உலகில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள்” ('Inclusion in the Workplace: Challenges and Opportunities in a Post-Pandemic World') என்பதாகும்.




## சர்வதேச குழந்தைகள் புத்தக தினம்

- இது இளையவர்களுக்கான புத்தகங்கள் குறித்த சர்வதேச வாரியத்தினால் (International Board on Books for Young People – IBBY) அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வு ஆகும்.
- IBBY வாசிப்பின் மீதான நேசிப்பை ஈர்ப்பதற்காகவும் குழந்தைகளின் புத்தகங்கள் குறித்த தகவலைப் பரப்புதற்குமான ஒரு இலாப நோக்கமில்லா அமைப்பாகும்.
- 1967 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "வார்த்தைகளின் இசை" (The Music of Woods) என்பது ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★